**இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் - 2017**

---

இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, அகல் விரிவான வருமானக் கூற்று, நிதியம் மற்றும் ஒதுக்கங்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 03 ஆம் இலக்க இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனம் (கூட்டிணைக்கும்) சட்டத்தின் 10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களினால் இலங்கை புவிச்சரிதவியல் நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

2014 இன் 03 ஆம் இலக்க புவிச்சரிதவியல் நிறுவன (கூட்டிணைக்கும்) சட்டத்தின் 11(I) ஆம் பிரிவின் பிரகாரம் சபையினால் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் தொடர்பாக அறிக்கையொன்று எல்லா நிதியாண்டு தொடர்பாகவும் தயாரிக்கப்பட்ட வேண்டியிருந்ததுடன், அவ் அறிக்கை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் அவ் அறிக்கை கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடம் அடுத்த வருடம் ஆறு மாதங்கள் முடிவடைய முன்னர் சுற்றாடல் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாருக்கு மற்றும் 1980 இன் 31 இலக்கம் கொண்ட தன்னார்வ சமூக சேவை அமைப்பு (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்ட தன்னார்வ சமூக சேவை அமைப்புக்களின் பதிவாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் நிறுவனத்தினால் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அறிக்கை 2017 நவம்பர் 05 திகதி சமர்பிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 835,423 இற்கான மிகை ஒன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 419,289 தொகை காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 416,134 இற்கான வளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளது. நிருவாகச் செலவுகள் ரூபா 326,523 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் வருமானம் 742,063 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு காரணமாகி இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

2014 இன் 03 ஆம் இலக்க புவிச்சரிதவியல் (கூட்டிணைக்கும்) சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புவிச்சரிதவியல் தொடர்பாக அறிவினை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விரிவாக்களுக்காக வடிவமைக்கப்பட்ட இணைய தளம் தொடர்பாக அங்கத்தவர்களை விழிப்பூட்டல் மற்றும் பிரபல்யப்படுத்துவதற்கு செயற்பட்டிருந்தது.

(ஆ) அங்கத்தவர்களை தரப்படுத்துவதற்காக நியமனம் செய்யப்பட்ட நுழைவு மற்றும் ஒழுக்கவியல் செயல் நடவடிக்கைக் குழு (Admission & Ethical Practices Committee) ஊடாக மீளாய்வாண்டின் போது 20 தொடர்புள்ள அங்கத்தவர்கள் பட்டய புவிசரிதவியலாளர் ஒருவர், 16 அங்கத்தவர்கள் மற்றும் 9 அனுமதிப் பத்திரங்கள் உடைய அங்கத்தவர்கள் தெரிந்தெடுத்திருந்தனர்.

(இ) மீளாய்வாண்டின் போது இரண்டு தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் புவிச்சரிதவியல் நிறுவனத்தின் தொழில் சார் அலுவல்களை கட்டுப்படுத்தல் மற்றும் அதன் பொதுவான செயற்பாடுகள் உயர்ந்த தரத்தில் நடாத்துவதற்கும் புவிச்சரிதவியலாளர்களின் அபிலாசைகளை மற்றும் தரத்தை முன்னேற்றுதலும் மேன்படுத்தலுக்கான பின்னணி ஒன்றினை தயாரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுகையும்

---

### 5.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் குறிப்பிட்ட ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், 2017 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டிய குறைபாடுகளை திருத்திய நிதிக்கூற்று 2018 செப்டம்பர் 25 ஆந் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்கான பாதீடொன்று தயாரித்திருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அங்கத்துவக் கட்டணம், வருமானம் கணக்கீடு செய்வதில் பலவீனங்களை சரி செய்தல் தொடர்பாக மேலும் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.